**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**DW4 – OS. No. 250/2017 CW 470/2018**

2023 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி கூடுதல் சார்வு நீதிபதி திருமதி.எம்.மேகலா மைதிலி பி.ஏ.பி.எல் முன்னிலையில் திருமதி.ரேகா கிரேடு 2 பேன்ச் கிலர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திரு.கார்த்திக் | தொழில் : |
| த/பெ. : திரு, ராஜேந்தரன் | வயது : 34 |
| முகவரி : | |

**பிரதிவாதி தரப்பில் அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் நிட் சிட்டி கிளை இண்டியன் ஓவர்சிஸ் வங்கியில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்பட்டது. அழைப்பாணையில் bloom knit finisher என்ற நிறுவனத்தின் வங்கிக் கணக்கு துவங்கியதற்காக படிவமும் வங்கிக் கணக்கு பட்டியலும் கோரப்பட்டு இருந்தது. வங்கிக் கணக்கு துவக்கு படிவம் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன்.(அசல் சரிப்பார்க்கப்பட்டது) அது பிரதிவாதி தரப்பில் **Ex Y4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வங்கிக் கணக்கு பட்டியல் தாக்கல் செய்கிறேன்.(அசல் சரிப்பார்க்கப்பட்டது) அது பிரதிவாதி தரப்பில் **Ex Y5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அது நடப்பு கணக்காகும். வங்கிக் கணக்கு எண் 133002000006003 மேற்படி கணக்கானது 8.12.2010 ல் துவங்கப்பட்டது. மேற்படி வங்கிக் கணக்கு துவங்கும் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியானது குப்பன்ன செட்டியார் வீதி ஏ 1 டையர்ஸ் காம்பௌண்ட் பல்லடம் ரோடு திருப்பூர். 26.12.2013 தேதியில் பங்குதாரான ரேனுகாதேவி என்பவர் வங்கிக் கணக்கை முடக்கம் செய்யுமாறு வங்கிக்கு கடிதம் அனுப்பியுள்ளார். அதன் அடிப்படையில் வங்கிக்கணக்கானது முடக்கம் செய்யப்பட்டுள்ளது. எனது தரப்பு சாட்சியினை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

**குறுக்குவிசாரணை**

1. கூட்டாண்மை நிறவனத்திற்கு வங்கிக் கணக்கு ஆரம்பிக்கும் போது நிறுவனத்தின் பங்குதாரர்கள் வங்கியில் நேராக ஆஜராகி அவரது அடையாளத்திற்கான ஆவணங்களை தாக்கல் செய்ததால் தான் வங்கிக் கணக்கு ஆரம்பிப்போம் என்றால் ஆமாம். கூட்டாண்மை நிறுவனத்திற்கான பங்குதாரர் ஒப்பந்தத்தின் நகலையும் தாக்கல் செய்வார்கள் என்றால் ஆமாம். மேற்படி கூட்டாண்மை நிறுவனத்திற்கு இரண்டு பங்குதாரர்க்குமே காசோலை மூலம் இயக்குவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 26.12.2013 க்கு முன்பாக மேற்படி கூட்டாண்மை ஒப்பந்தத்தை பொறுத்து வங்கிக்கு எந்த புகாரும் அளிக்கப்படவில்லை என்றால் ஆமாம். அழைப்பாணையில் முதவாதாக குறிப்பிட்டுள்ள ஆவணம் எங்களுடைய வங்கி சார்ந்தது இல்லை என்றால் ஆமாம்.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

M MEKALA MYTHILI

Digitally signed by M MEKALA MYTHILI
Date: 2023.08.07 18:18:26 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.